


**08. 01. 2026**

தலைப்புச் செய்திகள்

1. வளர்ச்சி அடைந்த பாரத்திற்கான இளம் தலைவர்கள் மாநாடு, நாட்டின் வருங்காலத்தை நிர்ணயிக்கும் என்று மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

2. தேசத்திற்காக செயலாற்ற வேண்டும் என்ற விழிப்புணர்வை ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதல் நாட்டு மக்களிடையே ஏற்படுத்தி உள்ளதாக விமான படை தளபதி ஏர். சீஃப் மார்ஷல் அமர் ப்ரீத் சிங் கூறியுள்ளார்.

3. தமிழ்நாட்டில் குடும்பஅட்டை தாரர்களுக்கு பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தை முதலமைச்சர் திரு. மு. க. ஸ்டாலின் சென்னையில் இன்று தொடங்கிவைத்தார்.

4. அஇஅதிமுக கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணைய வாய்ப்புள்ளதாக அக்கட்சியின் பொதுச்செயலாளர் திரு. எடப்பாடி கே. பழனிச்சாமி தெரிவித்தார்.

5. மலேஷிய ஒப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

இனி விரிவான செய்திகள்

**************

இளம் தலைவர்கள் மாநாடு

நாட்டின் இளையோர் சக்தி, பல சவால்களை எதிர்கொண்டு எதிர்காலத்திற்கான நிலைபாட்டை உறுதிசெய்ய, வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான இளம் தலைவர்கள் மாநாடு வழிகோலும் என்று, மத்திய இளைஞர் நலத்துறை அமைச்சர் டாக்டர் மன்சூக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் வளர்ச்சி அடைந்த பாரதத்திற்கான இளம் தலைவர்கள் மாநாடு நாளை தொடங்க உள்ள நிலையில் அமைச்சர் இன்று வெளியிட்ட சமூகவலைதள பதிவில் நான்கு நாட்கள் இம்மாநாடு நடைபெறும் என்றார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடி முன்னிலையில் தேச வளர்ச்சிக்கான தங்களது ஆக்கப்பூர்வமான சிந்தனைகளையும், யோசனைகளையும் இளையோர் எடுத்துரைப்பார்கள் என்றும் குறிப்பிட்டார்.

இளையோர் சக்தி அதிகம் உள்ள நாடாக இந்தியா திகழும் நிலையில், கொள்கைகளால் மட்டுமல்லாமல், அவர்தம் துணிச்சல், உறுதிபாடு மற்றும் ஆலோசனைகளால் நம் தேசத்தின் எதிர்காலம் நிர்ணயிக்கப்படும் என்றார்.

பிரதமர் திரு.நரேந்திரமோடியின் அழைப்பிற்கு ஏற்ப சென்ற ஆண்டு ஜனவரியில், இளையோர் பேச்சுவார்த்தைகள் மாநாடு தொடங்கப்பட்டதை எடுத்துரைத்த அமைச்சர், ஒரு லட்சத்திற்கும் மேற்பட்ட இளையோர் பொதுப்பணிகளில் ஈடுபட இது வழிவகை செய்வதாக கூறினார்.

**************

அமர் ப்ரீத் சிங்

ஆபரேசன் சிந்தூர் துல்லிய தாக்குதலில் தேசிய மாணவர் படையினரின் பங்கு அளப்பரியது என்று விமானப்படை தளபதி ஏர். சீஃப் மார்ஷல் அமர் ப்ரீத் சிங் பாராட்டு தெரிவித்துள்ளார்.

புதுதில்லியில் குடியரசு தின அணிவகுப்பில் பங்கேற்க உள்ள தேசிய மாணவர் படை முகாமில் இன்று உரையாற்றிய அவர், NCC மாணாக்கரின் வீர தீர செயல்பாடுகள் மக்களுக்கு உத்வேகம் அளித்ததாக பெருமிதம் தெரிவித்தார்.

தேசத்திற்காக செயலாற்ற வேண்டும் என்ற உணர்வையும், விழிப்புணர்வையும், ஆபரேசன் சிந்தூர் நாட்டு மக்களிடையே ஏற்படுத்தியதாகவும், அவர் குறிப்பிட்டார்.

இந்த விழிப்புணர்வை எழுச்சியுடன் கொண்டு சென்று எங்கெல்லாம் சாத்தியமோ அங்கெல்லாம் அர்ப்பணிப்புடன் சேவையாற்றுவதன் அவசியத்தையும் அவர் அறிவுறுத்தினார்.

**************

தர்மேந்திர பிரதான்

பொது தேர்வு எழுதும் மாணாக்கரின் மன அழுத்தத்தை களையும் பிரதமரின் பரிக்ஷா பே சர்ச்சா நிகழ்விற்கு இந்த ஆண்டு நான்கு கோடி பேர் பதிவு செய்துள்ளதாக மத்திய கல்வி அமைச்சர் திரு.தர்மேந்திர பிரதான் அறிவித்துள்ளார்.

கடந்த ஆண்டு 3 கோடியே 56 லட்சம் பேர் விண்ணப்பித்து கின்னஸ் உலக சாதனை நிகழ்த்தியதை அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

நாடுமுழுவதும் 10, 12ஆம் வகுப்பு பொதுத்தேர்வு எழுத உள்ள மாணாக்கர் தங்கள் கருத்துக்கள், எண்ணங்கள், அனுபவங்களை பகிர்ந்து கொள்ளுமாறு பிரதமர் அழைப்பு விடுத்துள்ளார்.

**************

கிரிராஜ்சிங்

அஸ்ஸாம் மாநிலம் குஹாட்டியில் தேசிய ஜவுளித்துறை அமைச்சர்கள் மாநாட்டை மத்திய ஜவுளித்துறை அமைச்சர் திரு.கிரிராஜ்சிங் இன்று தொடங்கி வைத்தார்.

மத்திய ஜவுளி அமைச்சகம் சார்பிலான இந்த இரண்டு நாள் மாநாட்டில், அனைத்து மாநிலங்கள், யூனியன் பிரதேசங்களின் ஜவுளித்துறை அமைச்சர்கள், உயர் அதிகாரிகள் பங்கேற்றுள்ளனர்.

உலகளாவிய போட்டி சூழலில், நிலையான, ஜவுளி சூழல் அமைப்பிற்கான விவாதங்கள் இதில் இடம்பெறும் என ஜவுளித்துறை இணை அமைச்சர் திரு.பபித்ரா மார்கரேட்டா தெரிவித்துள்ளார்.

**************

ஜியானேஷ் குமார்

புதுதில்லியில் தலைமை தேர்தல் ஆணையர் திரு. ஜியானேஷ் குமார் தலைமையில் மாநில தலைமை தேர்தல் அலுவலர்கள் கூட்டம் இன்று நடைபெற்றது.

வரும் 21ஆம் தேதி தொடங்க உள்ள ஜனநாயகம் மற்றும் தேர்தல் மேலாண்மை தொடர்பான மூன்று நாள் மாநாடு குறித்து இக்கூட்டத்தில் விரிவாக விவாதிக்கப்பட்டது.

தேர்தல் ஆணையர்கள் திரு, சுக்பீர்சிங் டாக்டர் விவேக் ஜோஷி உள்ளிட்டோர் மாநாடு தொடர்பான தேர்தல் அலுவலர்களின் பங்கு குறித்து எடுத்துரைத்தனர்.

தேர்தல் மேலாண்மையின் அனைத்து அம்சங்கள் குறித்தும் வரவிருக்கும் மாநாட்டில் விவாதிக்கப்படுகிறது.

சர்வதேச நாடுகளின் பல்வேறு பிரதிநிதிகள் உட்பட 100க்கும் மேற்பட்ட வல்லுநர்கள் பங்கேற்க உள்ள இந்த மாநாட்டில், இந்திய தொழில்நுட்ப கல்வி கழகம், இந்திய மேலாண்மை கல்வி நிறுவனம், தேசிய சட்ட பல்கலைகழகங்கள் உள்ளிட்ட உயர்கல்வி நிறுவனங்கள் கலந்துகொள்கின்றன.

**************

மார்கன் ஸ்டான்லி

நாட்டின் பொருளாதார வளர்ச்சி நடப்பாண்டில் 7.6 சதவிகிதமாக இருக்கும் என்று கணிக்கப்பட்டுள்ளதாக மார்கன் ஸ்டான்லி நிதி அறிக்கை தெரிவித்துள்ளது.

தேசிய புள்ளியியல் அலுவலகத்தின் கணிப்பான 7.4 சதவிகித வளர்ச்சியை பின்தள்ளி, பொருளாதாரம் 7.6 சதவிகிதமாக உயரும் என்றும், இந்த அறிக்கை கூறுகிறது.

நாட்டின் நிதி நிலைமை மற்றும் அரசின் நிதி கொள்கையால், வாங்கும் திறன் அதிகரித்தது, தொழிலாளர் சந்தை நிலவரங்களால் நுகர்வு திறன் மேம்பாடு, போன்றவற்றால் பொருளாதாரம் வளர்ச்சி பெறும் என்றும் அந்த அறிக்கை கூறியுள்ளது.

மூலதன செலவினங்களும், தனியார் முதலீடுகளும் மேலும் அதிகரிக்கும் என்றும் இந்த அறிக்கை தெரிவிக்கின்றது.

இதனிடையே நம் நாட்டின் ஒட்டு மொத்த வரி வசூல் 2027 ஆம் நிதியாண்டில் 1.1ஆக அதிகரிக்கும் என்று HDFC வங்கியின் அறிக்கை தெரிவிக்கின்றது.

2026ஆம் நிதியாண்டில் இது 0.6 சதவிகிதமாக உள்ளது.

2027ம் நிதியாண்டில் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சி 10.1 சதவிகிதமாக அதிகரிக்கும் என்றும் இந்த வங்கி தெரிவித்துள்ளது.

**************

முதலமைச்சர்

தொழில்நுட்ப வளர்ச்சியில் தமிழகம் பிற மாநிலங்களுக்கு முன்னோடியாக திகழ்கிறது என முதலமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.

சென்னையில் தகவல் தொழில்நுட்ப உச்சிமாநாட்டை இன்று தொடங்கிவைத்து பேசிய அவர், மாநிலத்தில் 32 மாவட்டங்களிலிருந்து மென்பொருள் ஏற்றுமதி நடைபெறுவதாக குறிப்பிட்டார்.

முன்னதாக தமிழ்நாட்டில் குடும்பஅட்டை தாரர்களுக்கு மூன்றாயிரம் ரூபாய் ரொக்கத்துடன் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் பணிகளை முதலமைச்சர் சென்னை ஆலந்தூரில் இன்று தொடங்கிவைத்தார்.

தொடர்ந்து அந்தந்த மாவட்டங்களில் அமைச்சர்கள் பொங்கல் பரிசு தொகுப்பு வழங்கும் திட்டத்தினை தொடங்கிவைத்தனர்.

பொங்கல் பரிசு தொகுப்பில், ஒரு கிலோ பச்சரிசி, ஒரு கிலோ சர்க்கரை, ஒரு முழு நீள கரும்பு இடம்பெற்றுள்ளன.

2 கோடியே 22 லட்சத்து 91 ஆயிரத்து 710 அரிசி குடும்ப அட்டை தாரர்கள் இலங்கை தமிழர் மறுவாழ்வு முகாம்களில் வாழும் குடும்பத்தினர் இதன்மூலம் பயன்பெறுவர்.

விலையில்லா வேட்டி சேலைகளும் பொங்கல் தொகுப்புடன் வழங்கப்படுகிறது.

**************

உதயநிதி ஸ்டாலின்

சென்னை சிந்தாதிரி பேட்டையில் பொங்கல் பரிசு தொகுப்பை வழங்கியபின் செய்தியாளர்களிடம் பேசிய துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் ஐந்து நாட்களுக்குள் பொங்கல் தொகுப்பு வழங்கும் பணிகள் நிறைவடையும் என்றார்.

பொங்கல் தொகுப்பு பெறுவதற்கான டோக்கன் விநியோகிக்கும் பணி ஏற்கனவே தொடங்கப்பட்டதாக கூறினார்.

**************

கே.என்.நேரு

தமிழ்நாட்டில் திமுக கூட்டணி வலுவாக உள்ளது என மாநில நகராட்சி நிர்வாகத்துறை அமைச்சர் திரு.கே.என்.நேரு தெரிவித்துள்ளார்.

திருச்சி ஸ்ரீரங்கம் புதிய பேருந்து நிலையத்தை இன்று திறந்துவைத்தபின் செய்தியாளர்களிடம் பேசிய அவர், தூய்மை பணியாளர்களின் கோரிக்கையை நிறைவேற்றுவது தொடர்பான பேச்சுவார்த்தைகள் நடைபெற்று வருவதாக குறிப்பிட்டார்.

**************

அன்பில் மகேஷ்

தமிழ்நாட்டில் வரும் கல்வியாண்டில் பாட திட்டங்களை மாற்றுவது தொடர்பாக விரைவில் கருத்து கேட்பு நடைபெறும் என்று மாநில பள்ளிகல்வித்துறை அமைச்சர் திரு.அன்பில் மகேஷ்பொய்யாமொழி தெரிவித்துள்ளார்.

திருச்சி திருவெறும்பூர் சட்டப்பேரவை தொகுதிக்குட்பட்ட கல்லூரிகளில் மாணாக்கருக்கான மடி கணினிகளை இன்று வழங்கி பேசிய அவர், கல்வியாளர்கள் மாணாக்கர் பெற்றோர்களின் கருத்துக்கள் கேட்டறியப்படும் என்றார்.

வரும் காலங்களில் மாணவ மாணவிகளை தொழில் முனைவோருக்கும் வகையில் மடி கணினிகள் உருவாக்கப்பட்டுள்ளதாக கூறினார்.

வாய்ஸ்

**************

கீதாஜீவன்

தமிழக அரசின் நிர்வாகம் வெளிப்படை தன்மையுடன் உள்ளதாக மாநில சமூக நலன் மகளிர் உரிமைத்துறை அமைச்சர் திருமதி கீதாஜீவன் கூறியுள்ளார்.

தூத்துக்குடியில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், பல்வேறு மக்கள் நல திட்டங்களை செயல்படுத்துவதன் மூலம் முதன்மை மாநிலமாக தமிழகம் திகழ்கிறது என்றார்.

**************

எடப்பாடி

தமிழ்நாட்டில் வரும் சட்டப்பேரவை தேர்தலில் அஇஅதிமுக, பிஜேபி கூட்டணி அதிக இடங்களில் வெற்றி பெற்று ஆட்சி

அமைக்கும் என அஇஅதிமுக பொதுச்செயலாளர் திரு.எடப்பாடி கே.பழனிச்சாமி நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

புதுதில்லி விமான நிலையத்தில் இன்று செய்தியாளர்களிடம் பேசிய அவர், அஇஅதிமுக கூட்டணியில் மேலும் பல கட்சிகள் இணைய வாய்ப்புள்ளதாக குறிப்பிட்டார்.

தமிழ்நாட்டில் குற்றச்சம்பவங்கள் அதிகரித்துள்ளதாகவும், பெண்கள் குழந்தைகளுக்கு பாதுகாப்பு இல்லாத நிலை காணப்படுவதாகவும் குறை கூறினார்.

மத்திய உள்துறை அமைச்சர் திரு.அமித்ஷாவிடம் தமிழகத்தின் அரசியல் சூழல் குறித்து தாம் எடுத்துரைத்ததாக திரு.எடப்பாடி கே பழனிச்சாமி தெரிவித்தார்.

**************

வானிலை

தென்கிழக்கு வங்க கடலில் நிலவிய காற்றழுத்த தாழ்வு மண்டலம், ஆழ்ந்த காற்றழுத்த தாழ்வுமண்டலமாக இன்று வலுப்பெற்று சென்னைக்கு தெற்கு தென்கிழக்கே, 980 கிலோ மீட்டர் தொலைவிலும், காரைக்காலுக்கு தென் கிழக்கே 810 கிலோ மீட்டர் தொலைவிலும் தற்போது நிலை கொண்டுள்ளதாக சென்னை வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

இது அடுத்த 36 மணி நேரத்தில் மேற்கு, வடமேற்கு திசையில் நகர்ந்து இலங்கை கடலோர பகுதிகளில் நாளை இரவு கரையை கடக்க கூடும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதன்காரணமாக நாளை திருவாரூர், நாகை, மாவட்டங்களில் கன முதல், மிக கன மழையும்,

ராமநாதபுரம் புதுக்கோட்டை தஞ்சை மயிலாடுதுறை மாவட்டங்களில் கன மழையும் பெய்ய வாய்ப்பிருப்பதாக இம்மையம் கூறியுள்ளது.

**************

பேட்மிண்டன்

கோலாலம்பூரில் நடைபெறும் மலேஷிய ஒப்பன் பேட்மிண்டன் மகளிர் ஒற்றையர் காலிறுதிக்கு இந்தியாவின் பி.வி.சிந்து முன்னேறியுள்ளார்.

ஆடவர் இரட்டையர் காலிறுதிக்கு சாத்விக் சாய்ராஜ், சிராக்ஷெட்டி இணை தகுதிபெற்றுள்ளது.

**************

இத்துடன் இந்த செய்தியறிக்கை முடிவடைந்தது